இடும்பாவனத்தில்

# இலவச முதலுதவி பயிற்சி முகாம்

திருத்துறைப்பூண்டி ராம்கோ தொண்டு நிறுவனம், சென்னை பூமிகா ட்ரஸ்டுடன் இணைந்து நடத்திய ஒரு நாள் இலவச முதலுதவி பயிற்சி இடும்பாவனம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. பள்ளியின் தலைமைஆசிரியர் கல்யாணசுந்தரி தலைமை தாங்கி பயிற்சியினைத் தொடங்கி வைத்தார். இடும்பாவனம், சுவாமி விவேகானந்தா சர்வோதைய மகளிர் மைய செயலாளர் பி.அய்யப்பன் முன்னிலைவகித்தார். திட்டம் குறித்து பூமிகா டிரஸ்ட் ஒருங்கிணைப்பாளர் புருஷோத் விளக்கிப்பேசினார். செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் பயிற்சியாளர் ராமசாமி நடத்தினார். ஆசிரியர்கள் சாம்பசிவம், இளங்கோவன், செல்வராஜ், கிராம கமிட்டித் தலைவர் எஸ்.நடராஜன், தென்னை வளர்ப்பு சங்கத்தின் செயலாளர் கேன்ஸ், மீரா வர்த்தகச் சங்க செயலாளர் பி.ராஜதுரை ராவுத்தையன், ஒட்டுநர் உரிமையாளர் சங்கத் தலைவர் ராம்கோ ஒருங்கிணைப்பாளர் அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் ராம்கோ தொண்டு நிறுவன இயக்குனர் சி.ஜீவானந்தம் வரவேற்றுப் பேசினார். இறுதியில் திட்ட மேலாளர் டி.சக்திவேலன் நன்றி கூறினார்.